**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(29.04.2023முதல் 03.05.2023)**

**அறிக்கை எண் 034/2023**

**தேதி.28.04.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 25.04.23முதல் 27.04.23 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 84 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 36 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (25.04.2023 முதல் 27.04.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 03.05.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **25/04** | **26/04** | **27/04** | தேதி | நாள்-1 29/04 | நாள்-2 30/04 | நாள்-3 01/05 | நாள்-4 02/05 | நாள்-5 03/05 |
| 5.7 | 21.2 | 9.0 | மழை (மி.மீ) | 12 | 12 | 18 | 35 | 24 |
| 37 | 36 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 35 | 34 | 33 | 33 |
| 25 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 25 | 24 | 23 | 23 |
| 6 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 68 | 84 | 73 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 90 | 90 |
| 74 | 36 | 36 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 50 | 70 |
| 12 | 9 | 12 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 4 | 4 | 4 | 4 | 4 |
| 250 | 90 | 90 | காற்றுவீசும் திசை | 160 | 180 | 180 | 200 | 110 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (29.04.2023 முதல் 03.05.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு **4** கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ளதொகுதிவாரியாகஉள்ள அடுத்தஐந்துநாட்களுக்கானமழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 29-04-2023 | 15 | 7 | 9 | 11 | 10 | 9 | 13 | 13 | 9 | 7 | 8 | 11 |
| 30-04-2023 | 34 | 11 | 13 | 19 | 15 | 12 | 28 | 28 | 11 | 13 | 11 | 18 |
| 01-05-2023 | 57 | 20 | 22 | 33 | 24 | 21 | 47 | 47 | 19 | 22 | 19 | 29 |
| 02-05-2023 | 58 | 34 | 37 | 43 | 38 | 36 | 52 | 52 | 35 | 36 | 34 | 41 |
| 03-05-2023 | 40 | 26 | 26 | 30 | 26 | 24 | 36 | 36 | 24 | 27 | 25 | 28 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த **5** நாட்களுக்கு மிதமானது முதல் கன மழையுடன் சுழல் காற்று எதிர்பார்க்கப்படுகிறது.<br>எதிர்பார்க்கப்படும் மழையினை சரிவுக்கு குறுக்காக கோடை உழவுசெய்து வேர்பகுதிகளில் சேமிப்பதுடன் சத்தான மேல் மண்அரிப்பினையும் தடுக்கலாம். |
| சோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் கோடைமழையை பயன்படுத்தி உழுத நிலங்களில் இறவை சோளம் விதைக்கவும். |
| கம்பு | விதைப்பு | இறவையில் கம்பு விதைக்க சரியான பருவமாகும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான சூரைக்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் **5** மாதங்களுக்கு மேலா கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| வாழை | **5** மாதத்திற்கு மேல் | மழையுடன் வேகமான சூரைக்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் **5** மாதங்களுக்கு மேலா வாழை மரங்களுக்க தகுந்த முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | தென்னை மரத்தைச் சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் மழை நீரை தக்க முறையில் வேரில் சேமிக்க உதவும். |
| மஞ்சள் | | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி அடுத்துவரும் மஞ்சள் நடவுக்கு நிலம் தயாரிக்க உகந்த காலமாகும். |
| கால்நடைகள் | | ஒரு சில இடங்களில் ஆடுகளில் துள்ளுமாறி நோய் காணப்படுகிறது. இதற்கு ஆடுகளை வெய்யில் வந்த பிறகு மேய விடவும். மேலும் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.<br>மழையுடன் இடி மின்னலும் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாக்க கொட்டைகளுக்குள் கட்டவும்.<br>கால்நடை குடில்களுக்கு உட்புறமும் அதை சுற்றி தண்ணீர் தேங்காமல் பாதுகாப்பதன் மூலம் கொசு உற்பத்தியை குறைக்கலாம். |

**குறுஞ்செய்தி**

*எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு மற்றும் வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுக்கவும்.*

***முதன்மைஅலுவலர் (GKMS)***
***வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்***
***த.நா.வே.ப.கழகம், கோவை***